◆ கடந்த காலங்களில் அடுக்குமாடி வீடுகளில் ஏற்பட்ட தீச்சம்பவத்தில் பலர் உயிரிழந்த அவலநிலை இனியும் நாட்டில் நிகழக்கூடாது.

◆ அடுக்குமாடி பகுதியில் ஏற்படும் தீயை அணைப்பதற்கு அனைத்து அடுக்குமாடி வீடுகளிலும் தன்னார்வத் தொண்டூழியக் குழு அமைக்கப்பட வேண்டும்.

◆ உயர்ந்த அடுக்குமாடி வீடுகளில் ஏற்படும் தீயை அணைப்பதற்கு தீயணைப்பு - மீட்புப் படை நவீன கருவிகளைக் கொண்டிருப்பது அவசியமாகும்.



# அவசர வேளைகளில் காத்திருக்கும் ஆபத்து

● பி.ஆர்.திருமுருகன்

கோலாலம்பூர், பிப். 14-

**தலைநகரைச் சுற்றி பல இடங்களில் அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டுள்ள வேளையில், அங்குள்ள அடுக்குமாடி வீடுகளில் முறையான பாதுகாப்பு இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.**

பி40 எனப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் எம்40 எனப்படும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தலைநகரில் 72 அடுக்குமாடி வீடமைப்புத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருந்து வருகின்றனர். கோலாலம்பூர் மாநகர் மன்றத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட அடுக்குமாடி வீடுகளில் தீச்சம்பவம் ஏற்படும்போது அங்குள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அதிக முன்னுரிமை வழங்கப்படுவது அவசியமாகும்.

நேற்று முன்தினம் செராஸ், ஸ்ரீ சபா அடுக்குமாடியின் 70ஆவது புளோக்கில் 17ஆவது மாடியில் ஏற்பட்ட தீயில் 5 வீடுகள் தீயில் அழிந்தன.

தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து ஹங்துவா, பண்டார் துன் ரசாக், ஸ்ரீ ஹர்த்தாமாஸ், புடு ஆகிய தீயணைப்பு, மீட்புப்படை நிலையங்களில் இருந்து 55 தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து உடனடியாக அருகிலுள்ள வீடுகளுக்கு தீபரவாமல் தடுத்து நிறுத்தியது பாராட்டுக் குரியது.

3ஆவது எண் கொண்ட வீட்டில் ஏற்பட்ட தீ பின்னர் அருகிலுள்ள 4 வீடுகளுக்குப் பரவியதாகக் கூறப்பட்டாலும்கூட, இச்சம்பவத் தில் உயிருடற்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தின்போது 17ஆவது மாடியில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு தீயணைப்பு - மீட்புப் படையினர் ஏணிகளில் ஏறிய வண்ணம் தீயணைக்கும் கருவிகளைத் தோளில் சுமந்து சென்றதாகக் கூறப்பட்டது மிகவும் பரிதாபத்தக்குரியது.

இத்தீச்சம்பவத்தில் 5 வீடுகள் தீக்கிரையான வேளையில் அந்த அடுக்குமாடி வீடமைப்புப் பகுதியில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு தீயணைப்பு - மீட்புப்படையினர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் அமைக்கப்பட்டிருந்த நீர் விநியோகத்தில் கசிவு ஏற்பட்டதால் அங்கிருந்து பெறும் நீர் வேகம் குறைந்து காணப்பட்டதால் அங்கு ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு தீயணைப்பு -மீட்புப்படையினர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியதாகவும் தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற அடுக்குமாடி வீடுகளில் தீ ஏற்படும்போது தீயை எளிதாக அணைப்பதற்கு அங்குள்ள தீயணைப்புக் குழாய்கள் முறையாக இருப்பதை அதன் நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும். இதுபோன்ற குடியிருப்புப் பகுதிகளில் தீ ஏற்படும்போது அங்குள்ள மக்கள் பாதுகாப்பாக இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

## தீ எச்சரிக்கை மணி

அடுக்குமாடி குடியிருப்பு களில் வசித்து வரும் மக்கள் தீச்சம்பவத்தின்போது உடனடி யாக அங்கிருந்து வெளியேறு வதை உறுதிப் படுத்துவதற்கும் அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கும் அரசாங்கம் குறிப்பாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தீக்கான எச்சரிக்கை மணியை பொருத்த வேண்டும்.

ஆறு வீடுகளை நாசமாக்கிய ஸ்ரீ சபா அடுக்குமாடியில் தீ எச்சரிக்கை மணி அமைப்பின் செயல்திறனைத் தீயணைப்பு - மீட்புப் படை பரிசோதனை செய்துள்ளது பாராட்டுக்குரியது.

அடுக்குமாடி குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படும் பெரும்பாலான தீ விபத்துகள் மனித அலட்சியத் தால் ஏற்படுகின்றன. கவனக்குறைவு மட்டுமன்றி, தீ விபத்து குறித்து சிறிதும் கவலைப்படாத மனப்பான்மையும் சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாத காரணத்தாலும் அங்கு தீ ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக விளங்கி வந்துள்ளது.

அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவதாலும் மின்சாதனங்களை இயக்கும்போது பொதுமக்களின் கவனக்குறைவு காரணமாகவும் பல தீ விபத்துகள் ஏற்படுகின்றன என்பதை தீயணைப்பு - மீட்புப் படையே ஒப்புக்கொண்டுள்ளது.









## பிரதான மின் விசை

அடுக்குமாடி வீடுகளிலுள்ள பிரதான மின் விசை எப்பொழுதும் மின்சாரத்தை கடந்து செல்லும் தன்மையில் உள்ளதால் அங்கு எளிதாக தீ ஏற்பட வாய்ப்பு உண்டு.

எனவே, அனைத்து மின் விசைகளும் பயன்பாட்டில் இல்லாதபோது எப்போதும் மூடப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மின்சாரப் பயன்பாட்டிலிருந்து பிளக்கை அகற்றவும் செய்ய வேண்டும்.

இதன்வழி குடியிருப்புவாசிகள் வீட்டை விட்டு வெளியேற அல்லது நீண்ட காலத்திற்கு வீட்டை விட்டு வெளியேற விரும்பினால் இது மிகவும் முக்கியம். மேலும் இதன்வழி அவர்கள் மின்சாரக் கட்டணத்தையும் சேமிக்க முடியும்.

பல வீடுகளில் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்தும்போது அதிக பிளக்குகளின் மூலம் மின்சார இணைப்பை ஏற்படுத்துவதாலும் சில சமயங்களில் தீ விபத்துக்கு காரணமாக அமையலாம். உதாரணத்திற்கு, ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று இணைப்புகளைப் பயன்படுத்துதல் அல்லது மின் சாதனங்களை ஒரே நேரத்தில் அதிகமாகப் பயன்படுத்துதல் அதிக வெப்பத்தை ஏற்படுத்தி இறுதியில் தீ விபத்து ஏற்படக் காரணமாக அமையலாம்.

## தீ அணைப்பதற்கு வசதிகள்

தலைநகரைச் சுற்றியுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் தீ ஏற்படும்போது அங்கு விரைந்து வரும் தீயணைப்பு - மீட்புப் படையினர் விரைவில் தீயை அணைப்பதற்கு அங்கு போதுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

செராஸ், ஸ்ரீ சபா அடுக்குமாடியின் 17ஆவது மாடியில் தீ ஏற்பட்டபோது தீயை அணைப்பதற்கு தீயணைப்பு - மீட்புப் படையினர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியதை அரசாங்கம் குறிப்பாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அங்குள்ள குழாய்களில் நீர் அழுத்தம் குறைவாக இருந்ததால் தீயணைப்பு - மீட்புப் படையினர் அங்கு ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்தனர். இறுதியில் 16ஆவது மாடியில் நீரை இழுக்கும் இயந்திரம் ஒன்றை வைத்த பின்னரே அங்கு ஏற்பட்ட தீணை அணைத்தனர். தலைநகரைச் சுற்றியுள்ள அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தீணை அணைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும்.

தீ ஏற்படும் சமயங்களில் தீயணைப்பு - மீட்புப் படையினர் அங்கு வருவற்கு முன்பு அங்குள்ள மக்கள் அத்தீயை அணைப்பதற்கான அனைத்து வசதிகளும் அங்கு ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும்.

ஒவ்வொரு மாடியிலும் தீயை அணைப்பதற்கு கேஸ் சிலிண்டர்களும் மணல் நிரப்பப்பட்ட வாலிகளும் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அடுக்குமாடி வீடுகளில் தீ ஏற்படும்போது அத்தீயை அணைப்பதற்கு ஒவ்வோர் அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தன்னார்வத் தொண்டூழியப் படையினரை அமைத்து அவர்களுக்கு தீயணைப்பு - மீட்புப் படை போதிய பயிற்சிகளை வழங்க வேண்டும்.

## நவீனக் கருவிகள் அவசியமாகும்

அதேவேளையில், தலைநகரைச் சுற்றி அதிகமான அடுக்குமாடி வீடுகள் உள்ளதால் அங்கு தீச்சம்பவங்கள் ஏற்படும்போது அத்தீயை எளிதாகவும் விரைவாகவும் அணைப்பதற்கு தீயணைப்பு - மீட்புப் படையினர் போதுமான அளவில் நவீனக் கருவிகளைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

10க்கும் மேற்பட்ட மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி வீடுகளில் தீ ஏற்படும்போது ஏணிப் படிகளை பயன்படுத்தாமல் நவீன ஓங்கிகளைக் கொண்டு தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு - மீட்புப் படை இறங்க வேண்டும்.

தலைநகரைச் சுற்றியுள்ள அடுக்குமாடி பகுதிகளில் தீ ஏற்படும்போது அங்கு உயிருடற்சேதம் ஏதும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது வீடமைப்பு ஊராட்சித்துறை அமைச்சு உட்பட கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் தலையாய கடமையாகும்.